2004 ஜூலை 29]

மாண்புமிகு உறுப்பினர் அருமைச் சகோதரர் திரு. பி.கே.டி. நடராஜன் அவர்கள் கூறியதைப்போல, 10,000–க்கு மேல் இருக்குமானால், வரும் நிதியாண்டில், அரசின் நிதிநிலைமைக்கேற்ப, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் ஆணை பெற்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 80, திருமதி ஆர். சரோஜா, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

முற்பகல் 11–15

80—

பச்சைமலைப் பகுதியை வளப்படுத்துதல்

***30222—திருமதி ஆர். சரோஜா:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், உப்பிலியாபுரம் தொகுதி, பச்சைமலைப் பகுதியை வளப்படுத்த எவ்வளவு நிதியை அரசு வழங்கியுள்ளது?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க பச்சைமலைப் பகுதியை வளப்படுத்த இதுவரை ரூ.114.69 இலட்சம் வழங்கப்பட்டு, பல பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நடப்பாண்டில் மேலும் சில பணிகள் நடைபெற உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஆர். சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் ரூ.114.69 இலட்சத்தில் பல பணிகள் நடைபெற்றுள்ளன என்று கூறினார். எந்தெந்தப் பகுதியில், என்னென்ன பணிகள் நடைபெற்றுள்ளன என்பதை அறிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணைக்கிணங்க பச்சைமலைப் பகுதியை வளப்படுத்த 2001–2002 நிதி ஆண்டிலிருந்து 2003–2004 நிதி ஆண்டு வரை நந்தியாபுரம், கோம்பைபுதூர், நாகைநல்லூர் முதலிய கிராமங்களில் ரூ.44.69 இலட்சம் செலவில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. இது தவிர, பச்சைமலைப் பகுதியினை வளப்படுத்தவும், அப்பகுதி மக்களின் வசதிகளை மேம்படுத்தவும், முதற்கட்டமாக 11–12–2002–ல் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் திருச்சி மண்டலம், உப்பிலியாபுரம் தொகுதியில் உள்ள பச்சைமலைப் பகுதியில் சோபனாபுரம் முதல் டாப் செங்காடு வரை சாலை பராமரிப்புப் பணி மேற்கொள்ளப்படும் என அறிவித்ததையடுத்து, 2002–2003 ஆம் ஆண்டில் வனத் துறை மூலம் ரூ.10 இலட்சமும் மாவட்ட ஆட்சியர் நிதியிலிருந்து ரூ.10 இலட்சமும் ஒதுக்கப்பட்டு, மேற்கண்ட சாலைப் பணிகள் பராமரிக்கப்பட்டு வந்துள்ளன. மேலும் 16 கிலோ மீட்டர் தூரத்திற்கு 2004–2005 ஆம் ஆண்டில் சாலைப் பணிகள் மேற்கொள்ள ரூ.50 இலட்சத்திற்கு 28–6–2004–ல் வனத் துறையால் ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும் அம்மா அவர்களின் ஆணையின் பேரில் பச்சைமலைப் பகுதியில் உள்ள மக்கள் பயன்பெறும் வகையில் காப்புக் காடு வழியாக மின்சாரம் எடுத்துச் செல்லப்பட்டு அங்குள்ள மக்களுக்கு மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறுகிய கால வினா

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுகிய கால வினா எண் 1, திரு. பி.கே. சேகர்பாபு. மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

1—

பாலங்கள் கட்டுதல்

***60768—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—